உ

கடவுள்துணை

அகஸ்தியமகாமுநிவர்

அருளிச்செய்த

# வயித்தியம் பின்னெண்பது.

இஃது

தஞ்சாவூர்

## த-நா-திருவேங்கடப்பிள்ளை

கேட்டுக்கொண்டபடியால்

தண்டலம் தமிழ்உபாத்தியாயர்

சுப்பராயமுதலியாரால்

பார்வையிடப்பட்டு

வேலப்பாக்கம்.

பொன்னுசாமிமுதலியார்

அவர்களது

பூமாதுவிளக்க அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது

௧௮௮௫

உ

கடவுள் துணை.

# விளம்பரம்.

இதனால் சகலமான பேர்களுக்குந் தெரிவிப்பதுயாதெனில் சென்னப்பட்டணம் பெத்துநாய்க்கன் பேட்டை மூல்லாசாயபு வீதி (ருள) வது நெ - வீட்டிலிருக்கும் பூமாதுவிளக்க அச்சுக்கூடத்தில் வைத்தியசாஸ்த்திரங்களும், ஜோதிஷங்களும் நளபீமபாகசாஸ்திரமும் இப்போது அச்சிட்டுவரும் பதினெண் சித்தர்கள் திருவாய்மலர்ந்தருளிய வைத்திய சில்லறை, கோர்வைகளும் மற்றுந்தேவையான தமிழ்ப் புத்தகங்களும், மே-வ ,பொன்னுசாமி முதலியாரிடத்திலும் தஞ்சவூரில் கீழ்வாசல் கடைத்தெருவில் மேல்சரகில் (௱௯) வது நெ புத்தக ஷாப்பில் .. த - நா - திருவேங்கடப்பிள்ளையிடத்திலும் கிரந்தம், தெலுங்கு, கன்னடம். பாளபந்து, இந்துஸ்தான் புத்தகங்களும். இங்கிலீஷ்புத்தகமும், கலேஜி புத்தகங்களும் விலைசரசமாய் விர்க்கிறபடியால் தேவையுள்ளவர்கள் பெற்றுக்கொள்ளலாம்,

இப்படிக்கு.

த-நா-திருவேங்கடப்பிள்ளை.

உ

கடவுள் துணை.

## அகஸ்த்தியமஹாமுனிவர்

# வயித்தியம் பின்னெண்பது.

## காப்பு - நூல்.

மூன்றுலெண்பதுஞ் சொன்னேன் முதலேகாப்பு, மூலத்தினின்ற கணபதியைப்போற்றி பின்னூலெண்பதுஞ்சொல்ல ஆயிகாப்பு,போரனயென்குருமுருகன்காப்பு,அன்னளிலீசலுபதேசத்தாலே,அகஸ்தியனென்றெனக்குப் பேருமாச்சு, பொன்னனவாதத்திலெட்சங்காப்பு, பூட்டினேன்பூரணசூத்திரத்திற்காணே. க

பூரணநூ லாயிரத்திறுநூறுஞ் சொன்னேன்பொருளான வாதத்துக்காதிநூல்தான், காரணமாம்வயித்தியத்திலிரண்டுலெட்சங் கைமுறையாம்பதினறுங் கண்டுகொள்ளு,ஆரணமாய்பெருநூலை சுருக்கிச்சொன்னேன் ஆயிரத்திருநூறுமிதில்முடிவதாகும், தாரணியில்வயித்தியத்துக் காதிநூலுந் தமிழ்நூலாயிரம்வெண்பா சாற்றினேனே உ

சாற்றினேனறுநூற்றி லிரண்டு காண்டங். தாய் சொல்ல அரன்சொல்லத்தானேபூவி. லேத்தினேன்ம ற்றநூல்களெல்லா, மிதின்கீழேயாகுமல்லா லேற்றமில் லை,மாற்றினேனெண்பதிலே சுருக்கம்ஞலு வகையறிய வேணுமென்று லின்னூற்றேடு நீற்றினங்களுருக்கின்ங கள் செந்தூரங்கள் நிலைப்பதற்குவழிலை விட்டால்நேர் படாதே ௩

நேராகவயித்தியநூ லனேகமுண்டு நிலைப்பதற்கு அறுனூறு மெண்பதுபோலில்லை சீரான அறுனூற்றி ல்முன்னூல்நன்று தெளிவாகவெண்பதிலே பின்னூல் நன்று கூறுனவிந்தனூல் பின்னூலாகும் கூறினேனி தையெடுத்து மறைத்தார்சித்தர் போனதன்மத்தைக் குறித்துப்பின்னும் பெரியோர்கள்வெளிவிட்டார் பே ணிப்பாரோ ௪

பாரப்பாபுத்திரனே மட்சகெந்தி பாடுகிறேனெ ண்பதிலே சுளுவையெல்லாம் ரோப்பானேய் போகக் கன்மகாண்டம் நிறைப்படிக்கி யார்முடிப்பா ருலகத் தோர்கள் சீரப்பாமனிதரெல்லா மிராஜாவோ சொல், திரவியவா னுயிரத்திலொருவனுண்டு ஊரப்பாயெளி

யோருக் கின்னூல்வேணு முயிர்குடிக்கு மின்னூலவு
றைசெய்வேனே ரு

## கன்மநிவர்த்தி.

செய்வதென்னு பஞ்சபாதகத்தினாலே தீராதகன்
மவினைசெடத்திற்காணு முய்வதற்குமருந்துடனே சாங்
திகொண்டு உறைக்கிறேன்கடத்தினிலே ஓடும்நீரை
மெய்வதென்ன யெடுத்துவந்துசுத்தமான வீடதிலே
தெப்பையிட்டுவைத்துக்கொண்டு கொய்வதென்னவெ
ன்னாலுஞ் சங்கும்பாசிக் கோர்த்துநீர்க் குடத்தினுட
வாயிற்சுத்தே சு

சுத்தியேபசு மஞ்சளரைத்துவப்பி துளிரானமாங்
குழையு மேலேவைத்து பத்தியேதூபமொடு தீபங்கா
ட்டி பகலவனுமுதலேழுனாளுமங்கே மத்தியானந்தனி
லேகன்மரோகி மன்னவனே முன்னாக வைத்துக்கொ
ண்டு புத்தியாங்குடசலத்தில் முக்கோணமிட்டு போதி
ப்பா யக்கோணத்திற் சிகாரம்வைத்தோதே எ

ஓதுவாய் கூவிளத்தின்பத்திரம் நூற்றெட்டு ஓங்
காரமுச்சரித்துக் குடநீர்க்குள்ளே நீதியாய் முகிந்தபி
ன்பூபாத்திரத்தினாலே நீரொடுத்துப்புரோட்சிப்பாய்க்கு
டசலத்தை பேதியாயொருமனதாய் சிரங்கைமூன்றுபி

ணியாளித்தனேக்களிக்கப் பிர்மைபோகும் நேத்தியாம
ருக்சன்முதலேழுனூருந் தினமுமிந்தப் படியெடுத்து
செய்யநன்றே அ

நன்றானஞூலேழுஞ்செய்தாயானல் நாடாதுகன்ம
வினேனட்டிலுந்தா னென்றான மூலமிது வெளிவிடா
தே ஓமந்தெற்பனஞ்செபங்க ளிதற்கீடல்ல நன்றாகக்க
ன்மத்தைநிவர்த்திசெய்து நலமானவமிழ்தத்தைதானே
கொள்ளு குன்றாதமேகமது யிருபத்தொன்றும் குடி
போகமருந்தொன்று கூறுவேனே கூ

## சொர்ன அப்பிரேகச்செந்தூரம்.

கூறுவேன் அப்ரோகச்செந்தூரமைந்து கொடிதா
னபவளபற்பமிடையேகூட்டி நீறுமேபரிரோக்கு அப்
ரோகத்திற்பாதி நிசமுள்ளரசபதங்கம் பவளம்நோய்ச்
சீறுமேஅயக்காந்தச் செந்தூரந்தான் சிரப்பாக அபுரோ
கந்தனக்குநோய் தாருமேகருவங்கம்ரேக்கிற்பாதி சாத
கமாய்குமரிப்பால்விட்டுஆட்டே ய

ஆட்டியே வில்லேதட்டிபுடத்திற்போடு வப்பனே
வட்டுருக்குபோலாமென்னே நீடியே வில்லேக்கிப்பா
திகெந்தி நேராககெந்திக்கிபாதிலிங்கம் மாட்டியேகலவ
த்திற் குமரிச்சாற்றால் மாளமட்டும் தானரைத்துவில்லே
தட்டி வாட்டியேரவிதனிலேவு ர்ந்தபின்பு வட்டோட்
டிற்சீலேசெய்து புடத்தைப்போடே கக

புடம்போட வேழுதிரம்சிவந்துனீறும் பொல்லா தமேகமெல்லாங்கடலோடிப்போக திடமான வர்னமது குறைந்துநின்றாற் செயலிங்கமனைக்களஞ்சி சேர்த்துப் போடு விஷம்போலேவந்தொருமேகந்தீரும் விட்டோ டிப்போகுமப்பா அனுபானங்கேள் உடலரிந்துயமுர்த சஞ்சீவிலேகிய முண்ணவே அனுப்பான முனைத்திட் டோமே கஉ

## தாம்பூரபற்பம்.

உரைத்தசொர்ன அபிரோகமென்றும்பேரு வொடு ங்காதசூலைகுன்ம வாய்வுக்கெல்லாங் கனைத்திட்டதாம் புரத்தைசுத்திசெய்து கனமானகுகையி லிட்டுருக்கும் க்கும்போது யிரைக்கிறேன் தாளகமு மண்டத்தோடு வெலுமிச்சம்பழச்சார்விட் டரைத்துவுண்டை குரைக் கிறேன்குன்றிமணிபோலுருட்டி குரையாமலொருபல ந்தான் மூன்று பலத்திற்குக்கே கங

தாக்கவே ஒவ்வொன்றுக்குடுக்கவாங்கி தாம்பூர ம்வெங்கலம்போற்றகர்ந்துகாணும் நீக்கவே பொடியா க்கியரைகரும்போது நீட்டுவாய்வீரமிரு களஞ்சி நீறு தூக்கியே சேர்த்தரைப்பா யெருக்கம்பாலாற் றுடியட ங்கமூன்றுனட்சுழலவாட்டி பூக்கவேவில்லைதட்டி புலர்

ந்தபின்பு புடம்போடுனூ றெருவிற்பொறுமிநீறும் கஉ
நீருனதாம்பிரத்தை கல்வத்திட்டு நேரிழையாள்மு
லைப்பாலாலரைப்பாய்சாமங் கூறுனரசங்கழஞ்சி கூட்டி
யாட்டி குக்குடத்திற்புடம்போட கொடியபாபந் தீரா
தநோயுண்டோகுன்மமெட்டுஞ் சேர்ந்தபல்றோகமெல்
லாந் தீர்ந்துபோகுங் காரானகனைற்சார்பிஞ்சுவாழைக்
கனியிலிடபத்தியம்பாற்கஞ்சியாமே கரு

## அரையாப்புக்குக்கட்டுமருந்து.

ஆகுமேமுளகோடுவெப்புசீரா யாமணக்கெண்ணெ
யொடுனெய்யுமாகும் போகுமேயிம்மருந்து முப்பத்தா
ரிற் பூட்டினேனிதுபோலேசுளுகிறுது வேகுமேஅரை
யாப்பு தீரவென்றால் வெள்ளைதனைக் காசிடைதான்மெ
ழுகிலூட்டி யேகுமேவில்லைதட்டி வெதுப்பிக்கட்ட யி
ருந்தயிடம்தெரியாம லேகும்பாரே கசு

## முப்புச்சுண்ணம.

பாரப்பாமுன்னூல்தா னெண்பதுக்குட்பாடினே
ன்குருமுடிக்கும்பக்குவத்தை சீரப்பாதிரந்துதான் சொ
ல்லவில்லைமூலந் திறந்தப்பாபாடினேன் பூனீர்வித்தை
கூரப்பாஅதினாலேகுத்தமென்றுக் கொட்டினேன் யிந்
தனூல்பின்னெண்பதுக்குள் ஆரப்பாகண்டு செய்வார்
யோகியாறு லரிந்துகொண்டுவழலையெடுத்தாடுவானே.

ஆடுவான்வழலைத்தொட்டே வாதியானு லதைவிட்டு மூதேவியலைவானும்போ லோடுவான் பூமியிலேமுளைத்தபூண்டு வொவ்வொன்றாய்ப்பார்த்துமனமுருகிமாய்வான் கூடுவான்கடைசியிலே பிச்சைவாங்கிகுடிப்பநல்லானூல்களுக்குக் குற்றஞ்சொல்வான் சோடுதானெடுத்தவனை யடிக்கவென்றுற் றெடுகுறிபோற் றெட்டேறுங்கோட்டை கல்லே ௧௭

கல்லென்றால்வெள்ளைக்கன்னுதக்கல்லாங் கருங்கல்லுஞ்செங்கல்லுஞ்சக்கானல்ல சொல்லென்ற யாளையாம்வழலைக்கல்லாஞ் சோமனென்று மிரவியென்றுஞ் சொன்னேன் சொன்னேன் புல்லனேபாரா து வாதக்கல்லிற் பூரக்கல் வீரக்க லிரண்டாய்நிற்கும் வில்லென்றபூரக்கற்சத்தியாச்சு வீரக்கல்லுப்பாச்சு யீசனுச்சே.

ஆச்சப்பாசத்திவிட்டா லாகாதுப்பு யப்பென்ற நீராலேசுத்தியாச்சு பேச்சப்பாயிருனூற்றிற் சொன்னேமானை பிண்டக்கல் வித்தைசெய்ய குருதான்வேனு மூச்சப்பாபெருனூ லாயிரமும்வேணு முறைதெரியுமில்லாட்டால் வழலைவித்தை காச்சப்பாயின்னூலில் வெளியாய்ச்சொல்வேன் காலமென்ன மீனமேஷத்தைப்பாரே ௨௰

பாரப்பாயிந்துவிலேவிளையும்பூவே பகற்காலமிர
விபட்டிசுண்ணமாகு மூரப்பா அப்பூவிற் குறுணிவாரி
வுத்தமனே செலத்தைவிட்டு தெளிவுவாங்கி நீரப்பாகா
ச்சியபின்மறுதிரந்தான் நிசமானசிறுநீர்விட் டிறுத்துக்
கொண்டு காரப்பாகாச்சியபின்தேசிகீறிற் கடந்தபின்பு
குண்டநீர் தெளிவிற்காச்சே உக

காச்சியேபின் பிரமகற்சுன்னம்பண்ணி கம்பியுப்
புசுன்ன முடன்மூன்றும்நோய் தாட்சியேவாருமற்க
ரைத்துவொன்றாயத் தணலிட்டுகுளமான பருவந்தன்
னிற் பாச்சிடுவாய்பாரையுப்பு சீனக்காரம் பாஷாணவீ
ரமொடுசாரங்காரங் கூச்சமில்லைதுருசோடு பொடித்து
க்கொண்டு கொட்டுவாய் யிளகிநிற்குங் குளம் பிற்
றனே. உஉ

குளம்பான மருந்தையெல்லாங் காறேட்டுவிட்
டுகொடுரவியிற்றிங்களொன்று குணமாயனுபவித்து த
ளம்பாமற் சாறுயம்படிஞலுக்குட் டான்விட்டு கலக்கி
வைப்பாய் றவியிற்குள்ளே விளம்பாமற் கவ்வுகொ
ண்டு கடைந்துநின்ற வெயில்முகத்திற் பாளையிலேவி
சிறுவாயே உங

விசிறியேபூப்போலேபொங்கிநிற்கும் விழைந்தவு
ப்பை பட்சமதுமேலேசென்று லசாவே யப்பூவிற்பல
ந்தான்வாங்கி அந்திடைக்கினேர்பாதி பூரம்வீர மூசா
வேகுருவண்டுகளஞ்சிகூட்டி யுத்தமனே கல்வத்திலிட்
டுகொண்டு பிசாவேஅறுவகைநீர் தன்னாலாட்டி யிடித்
திடுவாய்வில்லையது பெருமைதானே உ௪

பெருமையென்றசட்டியிலே கிளிஞ்சிச்சுண்ணம்
பேராகபாதியிட்டுவில்லைவைத்து அருமையென்ற அதி
ன்மேலேசுண்ணங்கொட்டி அமுக்கியேமேல்சட்டி கவி
ழ்த்துமூடி உருமையென்ற சீலைமண் ணேழுஞ்செய்து
உத்தமனேயெண்சாமம் தீயைமூட்டி வருமையில்லா
தீயைநீ மூட்டும்போது வயிரவர்க்குமாயிக்கும் வணக்
கஞ்செயயே உ௫

வணக்கஞ்செய் தாரவிட்டெடுத்துப்பாரு மல்லி
கைப் பூப்போலிருக்கும் வழலைச்சுண்ணங் குணக்க
மில்லாயிச்சுண்ணந்துருசுக்கப்பி கொடுரவியிற் போட்
டிடவேசுண்ணமாகு மணககவே வாடைபட்டாற் கு
தராசன் மதிமயங்கிகெட்டுமடா வாதவேலை சிணப்பொ
ழுதிலுண்டாகும் கோசமீசஞ் செயலரிந்த வாதிமகன்
வயித்தியனாமே உ௬

## வயித்தியன்செய்கையும்ஆதரவும்

வயித்தியனேயானுக்கால் முப்பூவேனு மரந்துவி ட்டுசெய்வதினுக் கிருபையென்று சயித்தியமா மூப சாரவார்த்தைசொன்னூற் றம்பிக்கிவந்தநோய் தானே போமோ ஈயத்தினிலேநவலோகம் பாஷாணங்க ணற் பூண்டுதளையாலே பற்பஞ்செய்வீர் பயித்தியமோவுங் களுக்கு னோய்கள்போக பண்டிதமே கண்டிதமாம் பார்த்திடவே, உஎ

பாராமல்செய்வதிலே தோஷந்தோஷம் பழம்பு ண்ணனிவயித்தியனுகுமென்றுக் கூறாமலிருக்குதோசா ஸ்த்திரங்கட்டோருக் குணமுள்ள ராசியென்றூற் பலிக் கும்நூல்கள் தேராமற் சொற்கேட்டுப் பரியாரத்தை செய்வதிலே பழிபாமஞ்சிக்குஞ் சிக்குங் கூறூனவுல கத்தில் வுயிளையெல்லாங் கொல்லுதற்கோ தலையெடு த்தாய் கூற்றனுமே உஅ

## இரசப் பதங்கம்.

கூற்றனும்னோய்தனக்கு ரசபதங்கங் கூறுகிறேன் புலத்தியனே கூர்ந்துகேளு பார்த்துநீதோண்டிரண்டுச மனுய்வாங்கி பருந்தோண்டிக்களைவாசி யுப்பையிட்டு மாற்றூனகெந்தியொடுபற்பாடகமும் மாஞ்சியொடுவெ ள்ளைப்பாழாணம்னலு நீற்றூனவகைக்கிபஙாக்களஞ்சி வீதம் நியளைப்பாய்வெற்றிலைச்சார்விட்டுஆட்டே. உகூ

ஆட்டியேகல்வத்தி லெடுத்துக்கொண்டு யதையெ
டுத்துயகல்போலே பிடித்துலாத்தி காட்டியே ரொண்
டுபலமிரசத்தைவிட்டு நற்பாண்டவுப்பின்மேல் நடுவே
வைத்து மீட்டியேவுப்புமேல் மறைத்துத்தூவி யேல்ச
ட்டி கவிழ்த்துயிடைசீலைசெய்து தீட்டியே அடுப்பில்
வைத்து யெட்டுசாமந் தியெரித் தாரவிட்டு திரந்து
பாரே ௧௰

பாரேநீமேல்தோண்டி டதங்கத்துள்ளே டதங்க
மதுபற்றிநிற்கும்பதனமாக ஆரவிட்டு பன்றியதுமயிரி
னல்வாங்கி யப்பனேபீங்கானி லடைத்துக்கொண்டுசா
ரவிட்டபனவெல்லம்நல்லவெல்லஞ் சக்கரைவாழைபழ
த்தி லுண்பீராகி லூரைவிட்டு ஓடிப்போம் நாளேழுக்
குளுண்டானபரங்கிமுதல் சூலைபோமே ௧௧

சூலைபோம்வாயிலது கடித்ததானுற் றுடியானக
ருவேலம்பட்டை தண்ணீர் காலையிலுமாலையிலும் வா
யிலூற்றி காரவேகொப்பளிக்கவீக்கந்திரு மூலமுநற்க
டுப்புரெத்த மிகுந்துதானல் மூட்டுவாய்ப் பாற்கஞ்சி
யிளஞ்சூடாக பாலனேயாதருட சையோகத்தை பாரா
தேமூன்று திங்கள் பத்தியமாய்ப்பாரே ௧௨

## அரிதாரபற்பம்.

பத்தியமாமரிதாரபற்பஞ்சொல்வேன் பருங்கட்டி யாகவொரு பலமாய்வாங்கி சத்தியமாஞ்சுண்ணும்புக்க ல்லிற்சுத்தி தாழ்வில்லாபீனாந்து திரமேசெய்து யுத்தி யாய்வெடியுப்புச்சுண்ணம்வீர முருவான பூநீறு சீனக் காரம் வெற்றியாய் வெள்ளையொடு யெருக்கம்பாலால் மேலானகட்டிக்கி கவசஞ்செய்யே ௩௩

கவசமிட்டக் கட்டிதனைக்காயவைத்துக் கனபூவா சம்பட்டையுடசாமபற்குள்ளே நிமிஷமிட்டு சீலமண் ணெழுஞ்செய்து நிலவாரமாயடுப்பேத்தி நினவாய்மூத் தீதுபசமிட்டுநெற்சாமமெரிக்கநீறுஞ் சிவசிவா அரியினு டதேவிநைந் துவசங்கட்டவேணுமப்பா லோகத்துள் ளே சுயமேருகஞ்சுரமாந்தந்தான் காணுமே ௩௪

காணவே அரிதாரப்பற்பந்தன்னை கனமானதிரி கடுகுதேனிலுண்டால் நாணுமேசுரமீளைக் கிரந்திகுஷ் ட்டம் நலமில்லாப்பீனிசங்கள் விஷநீரொல்லாங் கோணு மேபுகையிலையும் புளியுந்தள்ளு கொண்டபின்பு தலை முழுகிக் கூட்டியுண்ணே ௩௫

## சுரகோடாலி.

உண்ணவேசுரங்களுக்கு மாரனுக்கு மூதண்டசு ரக்கோடாலி வுறைக்கிறேன்கேள் விண்ணிலேபோன வுபிர்மீளுநீளும் வெள்ளையொன்று சூதமொன்று கௌ

வுரிபொன்று தண்ணவேமிளகுடனே சேர்த்தரைத்து
சாறொன்ற மத்தஞ்சார்க் கொம்பின்பாக லெண்ணவே
றுற்ராமபரைத்துநன்று யுழுந்திடைக் காயவைத்தெடு
த்துக்கொண்டு நண்ணவே மோர்க்காடி யிளநீர்தன்னி
லூட்டினு லொன்றிற்சுரம்ளுடாதே ௧௬

## மாத்திரைகளின்பெயர்.

நாடாதுமாத்திரையின்பேரேதென்று விரத்தினபூ
பதிசிந்தா மணிசஞ்சீவி வாடாதபகிரதியாம் அக்கினி
குமாரன் வாதருட்சதன்காம கேசரிஆனந்தன் ஊடா
னதிவையெல்லாம் அறுனூற்றுக்கு ளுரைத்திட்டேனி
ன்னம்வெகு வுசிதமெல்லாம் பாடாமலிருக்கவில்லை நூ
ல்கடோறும் பாத்தரிந்தாற் பண்டிதமும் பலிக்குந்
தானே ௧௭

## வயித்தியர் அரியவேண்டிய விபரம்.

பலிப்பதற்கு வியாதியுள்ளோர் திரேகக்கூறும்ப
ருத்தவுடல்மெலிந்தவுட னுேயின்கூறுஞ் சலிப்பில்லா
மதக்கூறுஞ் சலத்தின்கூறுஞ் சாதியமு மசாத்தியமு
ந்தத்துவக்கூறும் வலிப்பில்லாதாது நித்திரையின்கூறு
ம்மங்கைபர்களாசையின்மேல் மயக்கக்கூறும் பலிப்பில்
லாகன்மதன்ம நாட்டக்கூறும் பாத்தரிந்து பிறகுபார்
மருந்தின்கூறே ௧௮

கூரப்பாதாதுலட்சணமும்பாரு கோள்பாருநாள் பாருகுணமும்பாரு நேர்பாருதேச பேதங்கள்பாருநி லைபாருகிரகவுச்சம் நீசம்பாரு பேர்பாரு யிவனைநீ பிர குபாரு பேரதிலேகீர்த்தியின் றன்மம்பாரு வேர்பாரு தழைபாருமிஞ்சினுக்கால் மெள்ளமெள்ளபற்பஞ்செந் தூரம்பாரே ௫௯

பாரப்பாவுலகத்திற் பெரியோருண்டு பகைக்கார ர்மெத்தவுண்டு பாஷாண்டியுண்டு தாரப்பாதாரதரங்க ள்கண்டறிந்துசெய்ய தன்மம்வரு மதினாலே கீர்த்தியு ண்டு கூரப்பாயார்கவடஞ்செய்கின்றாலுங் குடுக்கிறம ருந்துகளிற் குற்றம்வேண்டாஞ் சீரப்பா கிருபைவை த்து மருந்துயீந்தாற் செய்தகன்மம் வாரவரா சேருந் தானே சு௦

தானென்ற ஞெயாலேயெடுத்தரோகந் தன்னில னல்மாருவுமுயிர்தானச்சு பூனென்ற சிலேத்பனமும் வாதபித்தம் பிடரிவழியாயிரங்கி காத்தில்நிற்கும் ஊ னென்றநாடியது ஒன்றேஒன்று ஒன்றாலேமூன்றாகிஅ னேகமாச்சு நானென்றஙவதாது தொந்தமாச்சு நன்றா னநாடியெல்லாந்தெளியநன்றே சுக

தெளிந்துபார் நாடியுதா ரணையின்போக்கு, செப்
பரியநோய்போக்கும் சடத்தின் போக்கும், மொழிந்து
பதினாயிரத்தில் சொன்னேன் சொன்னேன், மூன்றுவி
தகன்ம காண்டங்கள்சொன்னேன், பொழிந்திடவேம
ணிகாலாயிர் வெண்பாவில்; போக்கொன்றுந் தப்பாது
பூராயங்கள், தெளிந்து கொள்ள யின்னமொரு எண்
பதுண்டு, சிவசிவா வாதநூல் தெளிவுதானே. ௬௨

தானென்ற யெண்பதில் வழலைமார்க்கம், சாதமா
ய்ச்சவுக்காரத் தெண்ணெய்வாங்க, வேனென்ற கருக்
குருவும் வெளியாய்ச் சொன்னேன், வெட்டவெளியா
குமந்த நூலைபார்த்தால், கோனென்ற ரிஷிதேவர் முனி
வர் சித்தர், கூடியேபொதிகையில் வந்திருக்கும்போது.
ஏனென்றசாஸ்திரங்களெல்லாம்பார்த்து. யெண்பதை
யுமறைத்துவிட்டார் யெனைக்காணாமல். ௬௩

காணாமல்போகாமல் வழலைச் சுண்ணம் கருவாளி
யாயிரத்திருநூறும்பாரு தோணாமல்சட்டமுனி சொன்
னமார்க்கம் சுத்தரொம்பவகைதெரியச் சொன்னாரில்லை
பூணாமல் நந்திசர்வெளியாய்ச் சொன்னார்- புதைத்தாரோ
மூலவர்க்கப்பிள்ளையெல்லாம்-வீணாகசொல்லவில்லைம
ச்சகேந்திரன் வெடியுப்புசேர்க்கும்வகைவிளம்பினாரே.

## க்ஷயரோகம்வருதல்.

விளம்பினூர் க்ஷயரோகம்வருதல்கேளு. விசையா
னமூலத்தில் சூடுகொண்டு-தளம்பியே கபாலத்தில்மு
டிஜாடி. தாதுவெல்லாம் கலகலத்துரொத்தம்வற்றி உள
ம்பியேநீரொரிந்து சுரமுந் தோன்றி உளச்சலொடுமேனி
சம்நாக்குருசியற்று இளம்பியே யெட்டுவகை சயங்க
ளாகிகிளாறுகொண்டுவிடும்-யிளப்புத்தானே சடு

## க்ஷயகுலாந்தசெந்தூரம்

இளப்பான ரோகமது தீரவென்று வியம்புவேன்
க்ஷயகுலாந்த செந்தூரந்தான் பிளப்பான ஆயிரத்தைந்
நூல்சொன்னேன் பேச்சல்லாற் றிந்தமுறை பேணிப்
பாரு உளப்பானமால்தேவிபலமதொன்று உத்தமனே
பூசணிக்காய் நீரிற்காய்ச்சி சிலேப்பானத் துளாந்திரமாக
த்தூக்கி செங்கிளுவை சாற்றிலே சுத்திசெய்யே சசு

செய்திடவே அரிதாரம்சமனுப்பூரம் சிலேகூட்டி
யெருக்கம்பால் தன்னாலாட்டி கொய்திடவேகுகையிலி
ட்டுபுடத்தைப்போட குலமெல்லாந்தான் புகைந்துசா
ம்பலாகும் மெய்திடவே அந்திடைக்கி பவளம்நாரி யி
யிவைகூட்டி முன்சீபால புடத்தைப்போடு னைதிடவே
வெந்துபோம் அவ்விடைக்கி லிங்கம் நாலிலொன்று தங்
கமறை கெந்திகாலே. சஎ

கால்கூட்டிகாந்த மணை பலமுஞ்சேர்த்து கனமா
னகுமரிச்சார் முருக்கம் பூச்சார் கால்கூட்டி புடம்
போடு செந்தூரிக்கும் கனகமாஞ்செந்தூரம்புடமஞ்சா
ஞல்வால்கூட்டி குளாயிலே அடைத்துக்கொண்டு வா
கானதிரிகடுகு தேனிலுண்ணுபால்கூட்டிபத்தியங்கொ
ள்கருத்தாட்டின்பால் பத்துநாள் மருந்துண்ணபலிக்கு
மநன்றே. ௪௮

## இருமல்க்ஷயத்துக்குக்கியாழம்.

நன்றான பாலிலே சிறுகாஞ்சோரி, நலமானவேர்
த்தட்டி போட்டுக்காய்ச்சி. குன்றுமல் இராத்திரிக்கிக்
கொள்ளச்சொல்லு, குணமாகுமிருமல்முதல் சுரங்கள்
யாவுஞ், சென்றுகா மோராகாமீனுமாகா, செடகுறிப்பு
பெலன்பார்த்து சேர்தது உண்ணு, வெண்டானதாம
ரையின்மணியருப்பை, வென்னீரில்கொண்டவே விக்
கல்போமே. ௪௯

## விக்கலுக்கு.

விக்கல்போம் யின்னமொருவிவரங்கேளு, விசை
யான மூலத்தில் கனல்தான்மீறி,வெக்கை யாய்ச்சூடே
றிமேகநீராய, மேற்கொண்டு சிரசுவறைகண்ணில்தாவி
சிக்கவே நீர்கலந்து வாதபித்தஞ், சிலேற்பனகாசங்களி

ஞலொளியோமங்கும், பக்கெனவேவாய்வெறி குக்கு
மாகும், பார்வையிலே தொண்ணூற்றறுவியாதிபாரே.

பாரப்பாநேத்திர்நோய் தெண்ணூற்றாறும், பகரு
கின்ற குணங்குறிகள் திட்சையெல்லாம,நேரப்பாநேத்
திரநூல் அஞ்ஞூற்றுக்குள். நிலவரமாய் சொன்னேன
தில் தயிலநெய்கள், ஆரப்பா மாத்திரைகள் நசியமெ
த்ந, அவிழ்தங்கள்மைக்குளம்பு அபான சுத்தி, காரப்
பாநரம்பரிந்து சுடுதல்கண்ணில், கருவிகொண்டு குத்
துகிறகைசித்திரங்காணே. ௫௧

சித்திரமா மூபநயனம் வைத்துக்கட்டல், சிறப்பா
ன ஆவிபுற வடைகள்பூச்சு, பத்திரமாய்ப்பத்தியங்கள்க
ருமசாந்தி,பார்ப்பதற்குசாத்தியமோடசாத்தியங்கள் .இ
த்தனையுஞ் சொல்லிவைத்தேன் ஐந்நூற்க்கு, ளிதைய
றிந்தவயித்தியனே யிசனுகும், புத்தியுள்ள புலத்திய
னேபச்சையான, பூரமென்றகுளம்புதனைபுகலுவேனே

பூரக்குளம்பு

ஓமென்ற வாலுளுவை குங்குமப்பூ- உத்தமனேகி
ராம்பொன்று பூரமொன்று ஆமென்றசந்தனஞ்செண்ப
கப்பூ - அப்பனே கோரோஜனையும் லவுங்கப்பத்திரி-
நாமென்ற வெளவிச்சாரணையின் வேரும் - நலமாகசரி
யிடையாய் கூட்டிக்கொண்றி - ஏமென்ற வெள்ளிபற்ப
ம்நாலுங்கூட்டி-யிதமானகலவத்திலேத்தியாட்டே ௫௨

ஆட்டுவாய் நால்சாமம்தேனுமிட்டு - அப்பனேவ ளித்தவுடன்பாணிசோதித்து - தீட்டுவாய்வெந்தயம்போ ல்கண்ணில்பாதி-திராதகண் யக்கம் காசம்போகும்-நா ட்டுவாய் தலையிடியும்பித்தம்தீரும்-நண்டுகால் பெருத்த கண்ணும் நற்கண்ணுறும், கூட்டுவாய் சிறுசந்தனுதிமூ ழ்கு- கூத்தியர்க்கிடுமருந்து கூறுவேனே. ருச

## ஸ்ரீகள்வசியம்

கூறுவேன் விந்ததுவும் களஞ்சிவாங்கி-கோவைவ டபழத்துவிளை களஞ்சிகூட்டி-தேரவேபேய்க்கருப்பஞ் சாத்தாலாட்டி-சிறுமணியாய் உருட்டி அதை வுலரவை த்து - மாரவே வெற்றிலைப்பாக் கருந்தும்போது- மணி யொன்றுதெரியாமல் மங்கைக்கீய்ந்து-சேரவேவுனைப்பி ரிய மாட்டாள் கன்னி-தேக்கமது தெளிவதற்குதேங்கா ய்ப்பாலே. ருரு

## பலவலிக்கிமாழும்

பாலென்றால் பச்சைப்பால் குடிக்கத்தீரும்-பல்வ லிக்கிமருந்தொன்று பகரக்கேளு- கோலென்ற நீர்முள் ளி விளையை வாங்கி-கொட்டுவாய் பலம்பத்து பாண்ட த்துள்ளே, சீலென்றவசம்பு அரைபலமும் போட்டு-தி யெரித்து பதக்குநீ ரொட்டொன்றாக்கி - மேலென்ற அ ந்திசந்தி கொப்பளிக்க-வீக்கமொடு பல்வலியும் விட்டு ப்போமே. ருசு

## ஒருதலைவலிக்கிநசியம்

விட்டும்போம் ஒருதலைநோய் மண்டகுத்து-விசை யான தலைவலிக்கு நசியங்கேளு - தட்டுபோல் சுக்குமி ருபலமேநாழி-சலத்திலிட்டு நாழியாய்குறுகக்காய்ச்சி- தட்டிப்போநதேஙகாய்நெய் அரைக்கால்விட்டு, தாழ்வி ல்லா குங்குமப்பூ விருகன்போட்டு-எட்டிப்போம்நெ ய்வடித்து நசியமிட்டு - யிருந்த விட மதனைவிட்டுயே கும்பாரே. ருஎ

## மேகனுக்குபவளபற்பம்

ஏகுமே மேகநீரிருபதுக்கு - யிதமான பவளபற் பமொன்று சொல்வேன் - வாகுமேமுசலெலும்பு சுட் டச்சாம்பல், மக்களே பலமொன்று குமரிப்பாலால்- பாகுபெற அரைத்துருட்டிக் குகையாய் பண்ணி- பவ ளமது ஒருபலமும் கிறும்பு மாஞ்சி - வேகுமே கால் களஞ்சி வீரங்கூட்டி, விசையான முயல்ரத்தம் விட்டு ஆட்டே. ருஅ

ஆட்டியே வில்லைதட்டிக் காயவைத்து-அப்பனே குகையில்வைத்து சீலைசெய்து, நாட்டியே அன்பதெரு புடத்தைப்போடு-நலமான பவளமது பற்பமாகுங், கூ ட்டியே அமூர்த சக்கரையிற் கொள்ள,கொடிதானமே கநீர்குடியோடிப் போம், மேட்டிலே விளைத்த விளைப் போலேயாச்சு, மிலைச்சரக்கு நூல்கிடைத்தும் வீணு ம்பாரே. ருகூ

வினைகப்போகாமல் நூலைப்பாரு, வேண்டியே தவ சிருந்து பெற்றபிள்ளை, வாணாலே மயக்கம்வந்த பிரளி நோய்க்கி, மக்களே மருந்தொன்று வகையாய்க் கேளு, பாணான அவுரியின்வேர் தேத்தான்றெண்டு- பலத்துட னேபுங்கனுட கொளுந்து கால்தான். காணுமற் பொ டியாக அரிந்துகொண்டு, கலையமிட்டு யேரெண்டத்தெ ண்ணெய்வாரோ. சுய

ஏரெண்டத்தெண்ணெ யனைபடியும்விட்டு, என் கனே ரவிமுகத்தில் யெட்டுநாள்வை. கூரண்டத்தெ ண்ணெய்தனை வெதுப்பிக்கொண்டு, குழந்தைகட்கனை பிறளிசோகைமாந்தம், சாரென்றயெண்ணெயதுகரண டிவிதம், தப்பாமற்கொண்டிடவே சொல்லக்கேளு' கா ருண்டமேகசலம் பெருங்காத்தாலே, காணுமலோடுகி ன்றபடிபோலாமே. சுக

## அருக்கன் வேர்கிருதம்

போமப்பா, அருகன்வேர் கிருதநூலில் - புகலவி ல்லை யிந்நூலிற் புகழ்ந்துசொல்வேன்' நாமப்பாசொ ல்லுகிறோம் அருகின்மூலம், நன்முகவொருதுலாம் ந றுக்கிக் கொண்டு-வாமப்பா யிடித்ததனை பாண்டத்திட் டு, வளமாகநூறுபடி சலந்தான் விட்டு-ஓமப்பாநாலுப டியாகக்காய்ச்சி, உத்தமனே வடிகட்டி யிருத்துக்கொ ண்டு, தாயப்பா ஆவினெய் நாழிவிட்டு, தடையறவே மதுரமனை பலந்தாணுமே. சுஉ

பலமொன்று தாமரை செங்கழுநீர்மூலம், பாச்சா
வாயிருகளஞ்சி மைபோ லாட்டி, பலமென்று மாதனே
யின் பழச்சார்நாழி, பிரணாமற் படிகலக்கி நெய்யில்விட்
டு, சலமெல்லாம் வற்றுமட்டும் கமலம்போல' நெரி
த்துபதம்பார்த்து யிறக்கொண்டு - சூலமென்றுமூலத்தி
ல்அஞ்த்திருடு, கொடிதான கிரிச்சினங்கள் கிராணி
போமே. சுரு

கிராணிபோம்பிரமியங்கள் கபாலசூடு- கிறுகிறுப
புத்திருமடாபத்துநாளில் - கிராணியாய்க் கொண்டுவர
வெகுநோய்தீருஞ், சிவனுருஞ்சடமீதில் தரித்தகற்பம்,
பிராணிகளுக்காக யிந்தகிருதஞ்சொன்னேன், பிழைக்
கவென்றுற் செய்துண்டுபெரியோராவர், இராணியெ
ன்றமாதர்களுஞ் சையோகத்தால்-யிடுப்புளைவு கடுப்பு
வலியெல்லாம்போமே. சுசு

## கிரந்திக்குப்புகை

போமப்பா கிரந்திக்கி புகைதானென்று' புகழான
சூதமொன்று களஞ்சிவாங்கி, வாமப்பா காரியங்களஞ்
சிகூட்டி-மாட்டியே ரெண்டுமொன்றாயப் பொடியாய்ச்
செய்து, தாமப்பா யெருக்கம்வேர் கரியில்சேர்த்து. தா
ழ்வில்லா மூன்றுதினம் புகைபிடிக்க-சோமப்பாகிரந்தி
யொடு சூலைபோகும், துடியான மருந்தொன்று சொல்
லக்கேளே, சுஎ

## திசைவாயுவுக்குபேதியுண்டை

சொல்லுகிறேன் பேதிக்கி வாய்வுபுத்திரன் - சூத மொன்றுலிங்க மொன்று காரமொன்று - வெல்லுகிறே ன் இந்துப்பு கடுக்காய்ரோகணி - வெள்ளைக் காக்கண ம்வேரும் விராகன்மூன்று - நல்லுறேன் வாளமென்ன விருகனெட்டு-கல்பிரண்டைச் சாந்தாலே அரைப்பாய் சாமம்-மல்லுறேன் கடலைப்போ லுருட்டிக் கொண்டு, வாகாணயிஞ்சிச்சார் தன்னில்மாட்டே. சுசு

தன்னிலே வொருவுண்டை வுண்பீரானால், சாதக மாய் பேதியது தானேகாணும்-வெந்நீரு விட்டாலு ம்பேதியாகும், மிளகுநீர்விட்டசனம் வேண்டியுண்ணு- உன்னியேவரும் வாய்வுகாமநீர்கோர்வை- உதிரத்தில்வு ட்பிசமூ மோடிப்போகும் - கன்னிகையாம் பெண்களு க்கு பெரும்பாடானால்-கனமான மருந்தொன்று கண் டுபாரே. சுஎ

கண்டுபார் ஆவரையின் கியாழமிட்டு, கியாழத்தை ஒருபடிநீர்க் கருத்தாய்வாங்கி, குண்டுசட்டி தன்னில்வி ட்டு வேடுகட்டிக், குணமான நற்சாளை மீனைவாங்கி,பு ண்டுபோகாதபடி கஞ்சாயேலம். புத்துருக்குநெய்வார் த்து அரைத்துக்கொண்டு, விண்டுபோகாதபடிகியாழம் வேடு-மேல்வைத்து புட்டவித்துவிதமாய்த்தானே, சுஅ

விதமாகவொண்டு நாழிகைதான் வெந்தால், மேல் சட்டித் திறந்தெடுத்து மீனைவாங்கி, பதமாக மேல்கவசம்வாங்கிப்போட்டு, பாழானசிலாம்புமுள்ளுகளற்றிமைந்தா நிதமாகபத்துநாள்கொடுத்தாயானால், நில்லாதபெரும்பாடு நின்றுப்போகுஞ்,சதமான அந்தியிலேகியாழங்கொள்ளு, தண்மையென்ற ஆவாரைக்கியாழந்தானே.

## தாம்பிரபற்பம்

தானென்ற தாம்பூரப்பஸ்பஞ்சொல்வேன்,தகடாகதுட்டதனை சுத்திசெய்து, கோனென்றவெள்ளையொன்று வீரமொன்று, கோளிமுட்டைத்தோடொன்று கலவத்திட்டு,வானென்ற யெருக்கம்பால் விட்டு ஆட்டி, வளமாகக்கவசமிட்டு துட்டுக்கேதான் - ஊனென்ற சீலைமண் மூன்றுஞ்செய்து, ஒருமுழத்தில்புளியமரம்வொன்றுவாங்கே, எ௰

வாங்கியதை நடுவாகதுழைத் தரைச்சாண், மட்டுக்குள் கவசம்வைத்து மண்சீலைசெய்து, தாங்குபெறகுழிவெட்டிகெசபுடத்தில், தாக்கினால் தவளம்போல்பற்பமாகும், யேங்கியே திரியாதே யிந்தபற்பம், யெட்டுவகைகுன்மமுத லெல்லாம்போகும், பாங்குபெறத்திரிகடுகு தேனும்வாழைப், பழத்திலிட பிலத்தவினைபறக்கும்பாரோ, எக

பாரப்பா நீற்றுவகை அறியவேணும், பரங்கானப் பழக்கமல்லோ தெரியவேணும், காரப்பர்செபம்வேணு ந்தவமும்வேணும், கன்மவினை தீர்ப்பதற்குக் கனிவுவே ணுஞ்-சீரப்பா நூல்வேணுந்தைரியம்வேணுஞ்-செய்பா கம்கைபாகம் திட்சைவேணும்- ஊரப்பா யேகமூலிகை யின்போக்கு, உத்தமனே சொன்னேனுன் யிருனூற்ற ஞ்சே எஉ

அஞ்சானநூலிலே பஸ்பஞ்சொன்னேன், அதுக் கடுத்தகுருமுறையை அறிந்தாயில்லை, மஞ்சானமேகம் வருஷித்தாப்போலே, வைத்தியநூலொண்டு லக்ஷம்வள மாய்ப்பார்த்து, துஞ்சாதே யேகமூலிகையின் போக்கு ச், சொன்னபடியாடுதற்குக்குருவைச்சொல்வேன், தஞ் சானபூநீரு வீரம்பூரம்-சாரமொன்று காரமொன்று தா யுமொன்றே எங

தாயுமொன்று வெடியுப்பு தாரமொன்று, தவள மென்றவெள்ளையொன்று தானேகூட்டி, பாயுமென்ற எருக்கம்பால் விட்டுஆட்டிப் - பற்பமென்ற வகைக்கெ ல்லாம் குருவைசேர்த்து, காயென்றகவசமிட்டு சீலை செய்து, கனமானவோட்டிவிட்டு மண்ணுஞ் செய்து,

தீயென்ற நூல்படிக்கிபுடத்தைப்போடு, சிவசிவாயிரு
நூற்றஞ்சு திரந்தான்பாரே, எசு

## பூரணாதிலேகியம்

திரமான பூரணாதிலேகியந்தான் செப்புகிறேன்பு
லத்தியனே திடமாய்க்கேளு, நடமாட சடைக்கஞ்சாதி
ரமாய்ப்பார்த்து, நன்றானபதினைந்து பலந்தானப்பா-கு
டமான பாண்டத்திலிடித்துப்போடு, குளுந்தசலம்பதி
நாறுபடியுமவிட்டு, விடமாகக்காய்ச்சியே யெட்டொன்
றுக்கிமேலான கியாழத்தை யிருத்திடாயே எரு

யிருந்திட்ட கியாழத்தில் தேங்காய்ப்பாலு, யினாநீ
ரும்கருப்பஞ்சார் ஆவின்பாலும், மருந்திடாவகைக்கு
வொரு படிதான்விட்டு, வளமான ஆவினெய்படிதான்
வாரு, செரித்திட்டகமலம்போ லெரிக்கும்போது, திர
ண்டுவரும் பதத்திலேயிரக்கிக்கொண்டு- பருத்திட்டஆ
லம்வித்து வுருவிவித்து, பருத்திவிரை பருப்புடனே
ஆவாரைவித்தே, எகா

வித்தான முருங்கைவித்துப் பூனைக்காலி, விதமா
ன அமுர்தசக்கரைக்கிழும்பு, பத்தானசாதிக்காய் பத்தி
ரியேலம், பருமிளகு வால்மிளகு லவுங்கப்பத்திரி - மத்
தானகோரோஜனை கோஷ்டமாஞ்சி, வாலுளுவை சி
றுநாகஞ் செண்பகப்பூ, சத்தானதிரிகடுகு திரிபலாதி,
தாளிசமுஞ்சீரகமும்வெந்தையமுந்தானே எஎ

வெங்கைதயமும் நிலப்பனைவேர் பூமிக்காம்-வெற்றிவேர்விளாமிசசு முந்திரி பேரீத்து-சந்தயமாய் நினையாதேசாறப்பருப்பு-சதிராலைகுரோசாணிக் கசகசாவும் இந்தவகைக்கோர்களஞ்சி வறுத்துத்துளாய் - பிடித்துயேவடிவடிக்கட்டிவைத்துக்கொண்டு-முந்தியதோர் பங்கங்கள்நடடிரெண்டுக்குள் - மூட்டுவாய் பனைவெல்லமெல்லவெல்லமாமே எஅ

வெல்லமென்ற வகையொன்றுபலம் ரெண்டான-விடத்திலே கரைத்திடுவாய் அடுப்பிலேற்றி -சொல்லவென்றும் பாகுபதம் வருதும்போது-சூரணத்தை கொட்டிகொண்டு கெஞ்சாத்தூளும்-மல்லென்றும் புடந்தீர்ந்த பொடியைச்சேர்த்து-வளமான பாகதிலே தூவிக்கிண்டு - வில்லென்றால்முன்னுறைத்தகஞ்சா நெய்யை விட்டிடுவாய காலபடித்தான் மிஞ்சிவாறே எகூ

மிஞ்சாமல் தேனுமாகாணிவிட்டு - வெள்ளைநிறக் கோளிமுட்டை அஞ்சவித்து-மஞ்சாணவுட்கருவை வுதிர்த்துத்துவு-வலர்பஞ்சுதாரை அஞ்சுபலமும் போடு பஞ்சாலமெழுகுபோலெடுத்துப் பீங்கான்,பத்திரமாய் சுண்டக்காயளவுகொள்ள, நெஞ்சான யோகத்தைமுடிக்கும்லேகியம், நீட்டினல் மேகமெல்லாம் நீங்கிப் போமே அ௰

நீங்குமேமூலமுதல் வாய்வுபித்தம் - நில்லாதுகா மாறல் நின்றுபோகும், பாங்குபெறத் தேகமுமேகாந்தி யுண்டாம், பாழிலேபோகாயல் விந்தைகட்டும், தீங்கில் லாயிம்மருந்தை யோகத்துக்காய்.திடமாக வயித்தியனூ லெண்பதுக்குள், ஆங்காரம்பூரணலேகிய முஞ்செபு ன்னேன், அறுநூத்திற்காமகேசரியென்றேமே. ௮௧

காமகேசரியுரைத்தேன் கண்டசேதி- சடைந்தொ க்கவகைசொன்னேம் கற்பத்துக்கு-வாமபூசனை சொன் னேன் தீட்சைமார்க்கம் - வளமான வாதமிரு நூறுஞ் சொன்னேன் - நேமகமாய்நித்தினம் அன்பதுவும்சொ ன்னேன், நிட்சயமாய் மூப்பூவின் குருவும்சொன்னே ன், நாமகளாய்வந்து எந்தன்தாயார் சொல்ல - நன்றாக ஞானமொரு பத்துநூறே. ௮௨

ஞானமென்ன யோகம்விட்டால் துறவுஞானம்- நாலைவிட்டால் யோகமென்ன மாணயோகம்-பானமெ ன்ன ரசத்தைவிட்டால் சுரபானந்தான்-பகாரியார் நூ லைவிட்டால் பழிபாவந்தான்-கோலமென்னவழலைவிட் டால் குடல்வாதந்தான்-குடல்வாதம்பேதமல்லால்குண மாகாது-கானமென்ஞபிந்தநாள் யெண்பதையுந்தொட் டால்-காசினியில்சிவயோகிகாண்டமுற்றே ௩௩

அகஸ்தியர்-அருளிச்செய்த.

# வயித்தியம்பின்னெண்பது-முற்றிற்று

உ

சிவமயம்.

# பொருள் - அகராதி.

# பொருள் அகராதி